සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ඉන්දීය ඉතිහාසය II (I කොටස)
இந்திய வரலாறு II (பகுதி I)
History of India II (Part I)

**25 A** **T** **II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இந்திய வரலாறு ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை**

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள் :**

* இப்பகுதி **40** வினாக்களைக் கொண்டுள்ளது. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்ப உமது விடையைக் குறித்துக் காட்டுக.**
* பகுதி **I** இற்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) கிர்தார் (2) சுலைமான் (3) கைபர்
(4) இந்துகுஷ் (5) காரக்கோரம் (……)

**2.** (1) காவேரி (2) சட்லெஜ் (3) ராவி
(4) செனாப் (5) ஜீலம் (……)

**3.** (1) விசாகதத்த (2) சுத்ரக (3) வராகமிஹிரர்
(4) தண்டின் (5) ஆரியபட்டர் (……)

**4.** (1) தந்திதுர்க (2) முதலாம் கிருஷ்ணா (3) இரண்டாம் கோவிந்தா
(4) வரகுணவர்மன் (5) துருவ (……)

**5.** (1) மகாபலிபுரம் (2) பாரூத் (3) சாஞ்சி
(4) அமராவதி (5) நாகர்ஜுனகொண்டா (……)

**6.** (1) வளநாடு (2) மண்டலம் (3) பஞ்சாயத்து
(4) நாடு (5) கூற்றம் (……)

**7.** (1) கோசல (2) அங்க (3) மகத
(4) வஜ்ஜி (5) வத்ச (……)

[பக். 2 ஐப் பார்க்க

**8.** (1) சந்திர குப்த மௌரியன் (2) புஷ்யமித்ரர் (3) பிந்துசார
(4) அசோகன் (5) குணாளன் (……)

**9.** (1) நாகார்ஜுன (2) நிகண்டநாத புத்திரன் (3) பூர்ண காசியப்பன்
(4) மக்கலி கோசல (5) அஜித கேசகம்மல (……)

**10.** (1) புரோச் (2) தானா (3) முல்தான்
(4) பிரதிஷ்டான் (5) தெபால் (……)

● இல **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**11.** (1) மஹாபலிபுரத்தின் பஞ்சரத ஆலயம் - பல்லவர்
(2) பதாமியின் விஷ்ணு ஆலயம் - சாளுக்கியர்
(3) தஞ்சாவூரின் பிருகதீஸ்வரர் ஆலயம் - பாண்டியர்
(4) பேலூரின் சென்னகேசவர் ஆலயம் - ஹொய்சலர்
(5) எல்லோராவின் கைலாசநாதர் ஆலயம் - இராஷ்டிரகூடர் (……)

**12.** (1) விஷ்ணு கோபன் - வெங்கி
(2) மகேந்திரன் - கோசல
(3) வியாக்ரராஜ - மஹாகாந்தாரா
(4) உக்கிர சேனன் - பல்லக்க
(5) தமன - எரந்தபல்ல (……)

**13.** (1) தேவகிரி - யாதவர்
(2) துவாரசமுத்திர - ஹொய்சலர்
(3) கல்யாணி - மேலை சாளுக்கியர்
(4) வரங்கல் - காகடியர்
(5) மதுரை - பல்லவர் (……)

**14.** (1) விக்கிரமாதித்யன் - இரண்டாம் சந்திர குப்தன்
(2) மதுரை கொண்டான் - பராந்தகன்
(3) சகல உத்தராபதநாதன் - ஹர்ஷன்
(4) வாதாபிகொண்டான் - வரகுணவர்மன்
(5) பரமேஸ்வரன் - இரண்டாம் புலிகேசி (……)

**15.** (1) நர்மதை - பாருக்கச்சா
(2) தப்தி - கல்யாணி
(3) யமுனை - மதுரை
(4) கங்கை - கனோஜ்
(5) கோதாவரி - பிரதிஸ்டான் (……)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / திகதிகள் / கூற்றுகள் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ திகதிகள் / கூற்றுகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. **Y**நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) அஸ்வகோஷ | A சமுத்திர குப்தன் |
| (ii) ஹரிசேன | B ஹர்ஷன் |
| (iii) பாஹியன் | C கனிஷ்க |
| (iv) பாணபட்டன் | D இரண்டாம் நரசிம்மவர்மன் |
| (v) தண்டின் | E இரண்டாம் சந்திரகுப்தன் |

(1) AEBCD (2) BCDEA (3) CAEBD (4) DEBCA (5) EBCDA (……)

[பக். 3 ஐப் பார்க்க

| | X | | Y |
|---|---|---|---|
| **17.** (i) | பியதர்சிகா | A | வராஹமிஹிர |
| (ii) | பிருஹத்சம்ஹிதா | B | சோமதேவ |
| (iii) | கதாசரித்சாகர | C | ஆரியபட்ட |
| (iv) | சூரிய சித்தாந்த | D | கல்ஹண |
| (v) | ராஜதரங்கணி | E | ஹர்ஷா |

(1) DBCEA (2) CEDBA (3) DCEAB (4) EABCD (5) EACBD (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **18.** (i) | மஹிஷமண்டல | A | மஹாதர்மரக்கித |
| (ii) | மஹாரத்த | B | சோனாவும் உத்தருவும் |
| (iii) | ஹிமவத்த | C | மஜ்ஜன்திகா |
| (iv) | சுவர்ணபூமி | D | மஹாதேவ |
| (v) | காஷ்மீர-கந்தார | E | மஜ்ஜிம |

(1) ABDCE (2) BCDEA (3) CADBE (4) DAEBC (5) DEBAC (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **19.** (i) | சண்டப்பஜ்ஜோத | A | பல்லவர் |
| (ii) | பிந்துசாரன் | B | மௌரியர் |
| (iii) | சிமுக | C | அவந்தி |
| (iv) | ஸ்கந்தவர்மன் | D | சாளுக்கியர் |
| (v) | இரண்டாம் புலிகேசின் | E | சாத்தவாகனர் |

(1) CBEAD (2) CAEBD (3) CDBAE (4) DBCAE (5) EABCD (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **20.** (i) | ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் | A | உருகுணைக்குத் தப்பியோடிய ஐந்தாம் மகிந்தனைச் சிறைப்பிடித்தமை |
| (ii) | பராந்தகன் | B | I ஆம் சேன மன்னனின் காலத்தில் இலங்கையை முற்றுகையிட்டு அனுராதபுரத்தைக் கொள்ளையடித்தமை |
| (iii) | முதலாம் இராஜராஜன் | C | இலங்கையிலிருந்து சோழரைத் துரத்தியமை |
| (iv) | முதலாம் இராஜேந்திரன் | D | 5 ஆம் மகிந்தனின் காலத்தில் அனுராதபுரத்தைக் கைப்பற்றியமை |
| (v) | முதலாம் குலோத்துங்கன் | E | பாண்டிய அரச சின்னங்களை மீளப் பெறுவதற்கு அனுராதபுரத்தை முற்றுகையிட்டமை |

(1) ACBDE (2) BEDAC (3) CDEBA (4) EBCDA (5) ECDAB (……)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**21. இருக்கு வேத காலம்**
(1) நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையான விவசாய வாழ்க்கைக்கு மாறுதல் அடையும் காலம்
(2) தந்தை வழி அடிப்படையில் விரிவாக்கப்பட்ட குடும்ப கட்டமைப்பு தோன்றுதல்
(3) பல குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து கிராமம் உருவாகுதல்
(4) இராஜன் என்ற பெயருடைய தலைவரின் கீழ் குலங்கள் நிலவுதல்
(5) பூசகரால் நடத்தப்படும் யாகமே முக்கிய சமய நடவடிக்கையாக அமைதல்
(……)

[பக். 4 ஐப் பார்க்க

**22.** மகா அலெக்சாந்தர்

(1) கி.மு. 327 இல் அலெக்சாந்தர் ஹிந்துகுஷ்ஷை தாண்டி இந்தியாவினுள் நுழைந்தான்.
(2) அவனது இராணுவம் பியஸ் நதிவரை வெற்றிகரமாகப் பயணம் செய்தது.
(3) நந்த இராணுவத்தின் மீதான பயத்தினால் அலெக்சாந்தரின் இராணுவம் பியஸ் நதியைத் தாண்டிச் செல்ல மறுப்புத் தெரிவித்தது.
(4) அலெக்சாந்தருக்கும் தக்ஷிலா அரசனுக்கும் இடையில் பயங்கரமான யுத்தம் ஒன்று இடம்பெற்றது.
(5) அவனுடைய ஆசியப் பேரரசுக்கு தளபதி செலியூகஸ் நிகோடர் வாரிசு ஆகினான். (……)

**23.** சுங்க வம்சம்

(1) பிருகத்ருத மன்னனின் இராணுவத் தளபதியான புஷ்ய மித்திரன் தனது மன்னனைக் கொன்று சிம்மாசனம் ஏறினான்.
(2) புஷ்ய மித்திரனால் தாபிக்கப்பட்ட வம்சம் சுங்க வம்சம் என அழைக்கப்பட்டது.
(3) புஷ்ய மித்திர மகதப் பேரரசு வீழ்ச்சியடைவதைத் தடுத்து வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதில் வெற்றி கண்டான்.
(4) கடைசி சுங்க ஆட்சியாளனைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கி வாசுதேவ என்ற அமைச்சர் கன்வ வம்சத்தைத் தாபித்தான்.
(5) பிராமண மதத்தைக் கடுமையாகப் பின்பற்றிய சுங்கர்கள் ஏனைய மதங்களை ஒருபோதும் சகித்துக்கொள்ளவில்லை. (……)

**24.** கலிங்கம்

(1) கடுமையான போரினால் கலிங்கத்தைக் கைப்பற்றிய பின்னரே அசோகன் பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டான் என்று நம்பப்படுகின்றது.
(2) தோசலியைத் தலைநகராக கொண்ட கலிங்கம் மௌரிய பேரரசின் நிர்வாகப் பிரிவுகளில் ஒன்றாகும்.
(3) காரவேலனின் தலைமைத்துவத்தின் கீழ் மௌரியர்களிடமிருந்து கலிங்கம் மீண்டும் சுதந்திரம் பெற்றது.
(4) உதயகிரி மலையில் உள்ள பிரபல்யமான ஹதிகும்பா கல்வெட்டு காரவேலனின் சாதனைகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது.
(5) காரவேலன் சேதி வம்சத்தைச் சேர்ந்தவன். (……)

**25.** முதலாம் சந்திரகுப்தன்

(1) ஸ்ரீ குப்தனுடைய பேரனான முதலாம் சந்திரகுப்தன் குப்த பேரரசைத் தாபித்த ஆட்சியாளனாகக் கருதப்படுகின்றான்.
(2) லிச்சவியின் குமாரதேவியைத் திருமணம் செய்ததன் மூலம் தனது இராசதானியை முதலாம் சந்திரகுப்தன் விரிவடையச் செய்தான்.
(3) முதலாம் சந்திரகுப்தன் தன்னையும் தனது இராணியின் பெயரையும் இணைத்து நாணயங்களை வெளியிட்டான்.
(4) மஹா இராஜாதி ராஜ என்ற பட்டப்பெயரை முதலாம் சந்திர குப்தன் பயன்படுத்தினான்.
(5) இந்தியாவைத் தாக்கிய ஹூணர் ஆக்கிரமிப்பாளர்களை முதலாம் சந்திரகுப்தன் வெற்றிகரமாக விரட்டியடித்தான். (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

  **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **1** எனவும்
  **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **2** எனவும்
  **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **3** எனவும்
  **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **4** எனவும்
  வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ……… **5** எனவும்

  **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

[பக். 5 ஐப் பார்க்க

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26. வேத இலக்கியம்**

(A) வேதம் என்ற சொல்லின் பொருள் அறிவு என்பதாகும்.

(B) வேத இலக்கியம் சதுர் வேதம், பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

(C) இருக்கு வேதம் உலகின் மிகப்பழைய சமயநூல் எனக் கருதப்படுகின்றது.

(D) வேதங்கள் வாய்மொழி மூலமாகப் பரம்பரை பரம்பரையாக எடுத்துச்செல்லப்பட்டன. (……)

**27. வர்த்தமான மகாவீரர்**

(A) இவர் புத்தர் பெருமானின் சமகாலத்தவராவார்.

(B) இவர் சமண சமயத்தின் முதல் தீர்த்தங்காரர் ஆவார்.

(C) இவர் வேத நூல்களின் போதனைகளை நிராகரித்தார்.

(D) இவர் கர்ம வினையில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. (……)

**28. சந்திரகுப்த மௌரியனுக்கும் செலியூக்ஸ நிகேடருக்கும் இடையிலான உடன்படிக்கை**

(A) இந்துகுஷ்ஷைத் தாண்டிய பின்னர் சந்திரகுப்த மௌரியன் செலியூகஸ் நிகேடரை போரில் தோற்கடித்தான்.

(B) மௌரிய அரசசபைக்கு மெகஸ்தீனியஸை அனுப்பி நிகேடர் தனது நட்புறவை உறுதியாக்கிக் கொண்டான்.

(C) இந்துகுஷ்ஷுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களை ஆட்சி செய்வதற்கு நிகேடருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(D) தோல்வியின் பின்னர் நிகேடர் வெற்றியடைந்த சந்திரகுப்த மன்னனுக்கு 500 யானைகளை பரிசாக வழங்கினான். (……)

**29. இராஷ்டிர கூடர்**

(A) சாளுக்கிய அரசனான கீர்த்திவர்மனை தோல்வி அடையச் செய்த பின்னர் தந்திதுர்க்க தக்கணத்தில் இராஷ்டிரகூட இராச்சியத்தை தாபித்தான்.

(A) சமண சமயத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் இராஷ்டிரகூடர் தமது இராச்சியத்தில் சைவ, வைஷ்ணவ சமயங்களைச் சகித்துக் கொள்ளவில்லை.

(C) முக்கோணப் போராட்டத்தில் பங்கு கொண்ட முதலாவது இராஷ்டிரகூட ஆட்சியாளர் துருவ ஆவான்.

(D) தக்கணத்தில் இராஷ்டிரகூடர்களின் ஆதிக்கம் சோழ மன்னனான முதலாம் பரந்தகனால் தோற்கடிக்கப்பட்டது. (……)

**30. சமுத்திர குப்தன்**

(A) சமுத்திர குப்தன் சிம்மாசனத்தில் ஏறியதும் உடனடியாகவே தக்கிணபதவில் 12 இராச்சியங்களைக் கைப்பற்றினான்.

(B) சமுத்திரகுப்தன் கைப்பற்றிய தக்கிணபத இராச்சியங்களைத் தனது சாம்ராச்சியத்துடன் நேரடியாக இணைத்துக்கொண்டான்.

(C) அலகபாத் மெய்கீர்த்தி (பிரசஸ்த) சமுத்திரகுப்தனின் போர் நடவடிக்கைகள் பற்றி நான்கு தலைப்புக்களில் விவரிக்கின்றது.

(D) சமுத்திர குப்தனுக்கு மரியாதை செலுத்திய ஆட்சியாளர்களில் இலங்கை மன்னனும் ஒருவர் ஆவார். (……)

[பக். 6 ஐப் பார்க்க

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**31.** ஆர்யவர்தவின் தெற்கு எல்லையாகக் கருதப்பட்டது எது?
(1) சத்புர (2) விந்திய (3) நீலகிரி
(4) ஆரவல்லி (5) பரோடா (……)

**32.** மிலிந்த பன்ஹ நூலின் ஆசிரியர் யார்?
(1) அஸ்வகோஷ (2) வாசுபந்து (3) நாகார்ஜுனா
(4) நாகசேன (5) புத்தகோச (……)

**33.** சாளுக்கிய வம்ச முதலாம் புலிகேசியின் தலைநகரம் எது?
(1) வெங்கி (2) கல்யாணி (3) வாதாபி
(4) பிரதிஸ்தான் (5) வரங்கல் (……)

**34.** மும்முடிச் சோழ தேவன்' என்ற பட்டப் பெயரினைப் பெற்ற சோழ மன்னன் யார்?
(1) பராந்தகன் (2) முதலாம் இராஜராஜன் (3) முதலாம் இராஜேந்திரன்
(4) முதலாம் குலோத்துங்கன் (5) முதலாம் இராஜாதி இராஜன் (……)

**35.** இலங்கை இராணுவம் இந்தியாவில் சோழர்களினால் தோற்கடிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் கல்வெட்டு எது?
(1) ஆர்பாக்கம் (2) சிதம்பரம் (3) திருமலை
(4) இராமேஸ்வரம் (5) உத்தரமேரூர் (……)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | இருக்கு வேதத்துக்கு ஏற்ப கடவுள் புரந்தரன் ஹரியுபியா நகரத்தை அழித்தான். | வேதகால மக்கள் போர்க் கடவுளை இந்திரன் என்று அழைத்தனர். | (………) |
| **37.** | இந்து கிரேக்க மன்னர்களில் மினந்தர் முக்கியமானவர் ஆவார். | கிரேக்க அறிக்கைகளின்படி மினந்தரின் தலைநகரம் புருஷபுர ஆகும். | (………) |
| **38.** | ஹர்ஷ மன்னனின் ஆட்சிக் காலத்தில் பாஹியன் பிக்கு இந்தியாவுக்கு வந்தான். | பாஹியன் பிக்கு நாலந்த பல்கலைக்கழகத்தில் பௌத்த மதம் பற்றிக் கற்றான். | (………) |
| **39.** | சாத்தவாகனரின் பின்னர் பாண்டியர் தக்கணத்தில் அதிகாரத்துக்கு வந்தனர். | கிரேக்க மூலாதாரங்களின்படி பாண்டிய மன்னன் ஒருவனால் அனுப்பப்பட்ட ஒரு தூதுக்குழுவினை உரோமப் பேரரசனான ஜுலியன் வரவேற்றான். | (………) |
| **40.** | 'மத்தவிலாச பிரகாசனம்' பல்லவர் காலத்தில் சமய முரண்பாடுகள், சமய வாழ்க்கை என்பவற்றைக் காட்டும் நகைச்சுவை நாடகமாகும். | மத்த விலாச பிரகாசனம் மதுபோதையிலிருந்த கபிலவுக்கும் பௌத்த பிக்குவான நாகசேனவுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் அடங்கிய நகைச்சுவையுடன் கூடிய குறுகிய ஓரங்க சமஸ்கிருத நாடகமாகும். | (………) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

ඉන්දීය ඉතිහාසය II
இந்திய வரலாறு II
History of India II
**25 A T**

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ......................................



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ඉන්දීය ඉතිහාසය **II** (**II** කොටස)
இந்திய வரலாறு **II** (பகுதி **II**)
History of India **II** (Part **II**)

**25 A** **T** **II**

இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் **1206** வரை

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினா கட்டாயமானது.
* **முதலாம்** வினாவுக்கும் **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) ரூபார் (ii) தாம்ரலிப்தி (iii) போலன்
(iv) இந்துக்குஷ் (v) மதுரா (vi) சத்புரா
(vii) ஜுனாகாட் (viii) உஜ்ஜைனி (ix) பிரதிஸ்டான்
(x) தஞ்சாவூர் (xi) சுப்பாரக (xii) கோதாவரி

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** இந்தியாவின் வரலாற்றை வடிவமைப்பதில் வடமேற்குக் கணவாய்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தினை ஆராய்க. (16 புள்ளிகள்)

**3.** புராதன இந்தியாவின் சமய நம்பிக்கைகள் கிரியைகள் என்பவற்றைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

(i) சிந்துவெளி மக்களின் சமய நம்பிக்கைகளும் கிரியைகளும் (08 புள்ளிகள்)
(ii) இருக்கு வேதகால மக்களின் சமய நம்பிக்கைகளும் கிரியைகளும் (08 புள்ளிகள்)

**4.** "வட இந்தியாவில் முதலாவது பேரரசைக் கட்டியெழுப்பியவர்கள் மௌரியர்களாவர்."

(i) மௌரியப் பேரரசைத் தாபித்தவராகக் கருதப்படுபவர் யார்? (01 புள்ளி)
(ii) மௌரியப் பேரரசு பற்றிய தகவல்களை வழங்கும் முக்கிய இலக்கிய ஆக்கங்கள் **இரண்டின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
(iii) மௌரியர்களின் மத்திய மற்றும் பிரதேச நிர்வாகம் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(iv) மௌரியப் பேரரசின் படிமுறையான விரிவாக்கத்தைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஹரப்பா மக்களின் நகரத் திட்டமிடல்

(ii) சொலொஸ் மஹாஜனபத

(iii) இந்து கிரேக்கர்கள்

(iv) மௌரியப் பேரரசின் அழிவும் வீழ்ச்சியும்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** இந்தியாவின் வரலாற்றில் குஷானார் காலத்தின் முக்கியத்துவம் பற்றிப் பின்வரும் துறைகளின் கீழ் பரிசீலிக்குக.

(i) சமயமும் இலக்கியமும் (08 புள்ளிகள்)

(ii) கலைகளும் கட்டடக்கலையும் (08 புள்ளிகள்)

**7.** "குப்தப் பேரரசுக் காலம் இந்திய வரலாற்றில் உன்னத காலமாகக் கருதப்படுகின்றது."

(i) குப்தர் கால அரசகரும மற்றும் இலக்கிய மொழியும் எது? (01 புள்ளி)

(ii) குப்தர் காலத்தில் நிலவிய முக்கிய **இரண்டு** இந்துசமயப் பிரிவுகளும் எவை? (02 புள்ளிகள்)

(iii) குப்தர் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.(04 புள்ளிகள்)

(iv) குப்தர் பேரரசுக் காலம் இந்திய வரலாற்றில் உன்னதமான காலமாகக் கருதப்படுவதற்கான காரணங்களை விளக்குக.

(09 புள்ளிகள்)

**8.** "ஹர்ஷன் ஆற்றல்மிக்க போர்வீரனும் சிறந்த ஆட்சியாளனும் ஆவான்." இக்கூற்றினைப் பின்வரும் கருப்பொருள்களில் ஆராய்க.

(i) வட இந்தியாவில் பேரரசொன்றைத் தாபித்தல் (08 புள்ளிகள்)

(ii) ஹர்ஷ மன்னனின் சமூக, சமய நடவடிக்கைகள் (08 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஹியுங் சாங்

(ii) முக்கோணப் போராட்டம்

(iii) சோழர்களின் மாகாண நிர்வாகம்

(iv) பால அரசவம்சம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *